**தலைப்பு 278 - இரத்தினபுரி மாவட்ட செயலகம்**

1. **நிதிக்கூற்றுக்கள்**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 278 - இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 09 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 08 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை பெற்றுக் கொள்கையில் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணலின் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதல் பெறப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என மதிப்பிடல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த முன்வைப்பு மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானங்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆவனக் காப்பக இராக்கைகளை அமைக்க மீளாய்வாண்டினுள் செலுத்திய ரூபா 1,566,312 தொகை மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை | மேம்படுத்தல் ஒன்றாகக் கருதி கட்டிடம் மற்றும் நிர்மாணமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | பரீட்சை மீதியின் பிரகாரம் இயந்திர உபகரண கொள்வனவிற்கு செலவிட்ட தொகையை விட ரூபா 410,433 தொகை குறைபாக அப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பிரதேச செயலகங்கள் 02 இனால் மேற்கொண்ட இரட்டை பதிவுத் தவறாகும். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மாவட்ட செயலகம் உள்ளிட்ட 18 பிரதேச செயலகங்களின் தகவல்கள் பிரகாரம் நிதியல்லா சொத்து மீதிகளின் கூட்டுத் தொகையை விட ரூபா 45,905,518 தொகை அதிகமாக மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் அம் மீது காண்பிக்கப்பட்டிருந்தது. | பிரதேச செயலகங்கள் 02 இனது கணக்கீட்டு தவறுகள் இதற்கு காரணமாக இருந்தது. | துணை நிறுவன தகவல்களுடன் நிதிக்கூற்றுக்கள் இணங்கஞ் செய்யக் கூடிதாக வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மூலதன சொத்துக்களை சுவீகரிப்பதை விட ரூபா 14,956,813 கூடுதலாக அப் பெறுமதி நிதிப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதி அறிக்கைகள் தயாரிக்கும் போது சரிசெய்வதாக. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்

| கணக்காய்வு அவதானங்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 94(i) மற்றும் இலக்கம் 255/2017 மற்றும் 2017 ஏப்ரல் 27 திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை 2(அ) பந்திக்கு மாற்றமாக, 07 செலவின விடயங்களில் ரூபா 6,546,034 ஆன கடப்பாடுகளிற்கு உட்பட்டிருந்தது. | பட்டியல்கள் உரிய முறையில் கிடைக்காமை மற்றும் திறைசேரி ஏற்பாடு கிடைக்காமை இதற்கு காரணமாக இருந்தது. | உரிய சட்ட விதிகளின் பிரகாரம் நடடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானங்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இடமாறிச் சென்ற, ஓய்வு பெற்ற, கடமையை விட்டுச் சென்ற மரணித்த மற்றும் பணித் தடை விதித்த 18 பேர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,483,201 ஆன கடன் மீதிகள் 05 மாதங்களிற்கும் 14 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் பழமையாகும். | கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | தாமதமின்றி கடன்களை அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கருத்திட்டங்களை மேற்கொள்வதன் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானங்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச செயலக பிரிவு 16 இல் 2017 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலத்தினுள் மாற்று காணிகளை வழங்க இனங்காணப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 2434 ஆன போதும், அதில் 791 குடும்பங்களுக்கு 2022 திசெம்பர் 31 வரையும் காணி வழங்கப்பட்டிருக்கவில்லை. | உத்தேச காணிகள் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பினால் பரிந்துரைக்காமை, காணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளமை, அக் காணிகளில் வசிக்க நலன்பெறுனர்கள் ஆர்வம் இல்லாமை மற்றும் சட்ட பிரச்சினைகள் இதற்கு காரணமாக இருந்தது. | சுவீகரித்த காணிகளின் அளவையியல் அறிக்கையை பெற்று காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட வீடுகளிற்காக 2022 திசெம்பர் 31 திகதியளவில் செலுத்த வேண்டிய ரூபா 464,881,102 தொகையானது. 2017 ஆண்டு முதல் 2019 ஆண்டு | ஏற்பாடு மற்றும் முற்பணம் கிடைக்காமை, பூரணமற்ற விண்ணப்பம் வழங்கல் மற்றும் விண்ணப்பம் அனுப்பப்படாமை இதற்கு காரணமானது. | முற்பணம் கிடைத்தவுடனே கொடுப்னவை பூர்த்தி செய்ய வேண்டும். |

வரை செலுத்த வேண்டிய ரூபா 312,437,884 ஆன மீதியொன்றும் இந்நிலுவையினுள் நிலவியது.

### 3.2 போதியளவில் மேற்கொள்ளப்படாத கருத்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானங்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச செயலக பிரிவு 05 இனூடாக 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் 63 நலன்பெறுனர்களுக்கு ரூபா 28,925,000 தொகை வீட்டு நிவாரணமாக வழங்கப்பட்டிருந்தது. அதற்காக கடிதக் கோவை பேணப்பட்டிருக்காததுடன், நல்னபெறுனர்களின் விண்ணப்பங்களும் இல்லாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறே, உரிமை தீர்க்கப்பட்டிருக்காத 24 காணிகளிற்கும் கடன் வழங்கப்பட்டிருந்தன. அது தவிர குறைந்த குடும்ப அங்கத்தவர், விதவை அல்லது ஊனமுற்றோருக்கு முன்னுரிமை வழங்குதல் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரை இன்றி கடன் வழங்கப்பட்டுள்ளமை போன்ற விடயங்களின் மீது, பொருத்தமான நன்பெறுனர்களுக்கு கடன் வழங்கப்பட்டதா என நிச்சமற்றிருந்தது. | ஏதிர் காலத்தில் இக் குறைபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | உதவி வழங்கும் போது தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன வா என கவனத்தில் கொள்ள வேண்டும். |
| (ஆ) | குருவிட்ட, 02 கால்வாய்களின் வரம்பு உரிய முறையில் அமைக்கப்படாமை, கால்வாய் வெட்டும் போது அது வயல் நிலங்களைவிட கீழானதாகவுள்ள காரணத்தால் வயல்களுக்கு நீரை இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாமையும் அதற்காக செலவிட்ட ரூபா 1,941,748 தொகையினால் போதிய முன்னேற்றமொன்று கிடைத்திருக்கவில்லை. | ஒரு கால்வாயில் சேற்றுப் படிவுகள் மாத்திரம் அகற்றப்பட்டிருந்தது. இவ்வாறவை மேலும் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு தொழிநுட்ப உத்தியோகத்தர்களுக் கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | செலவிட்ட பணத்திற்கு போதியளவான பயன்பாடு காணப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானங்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச செயலகங்கள் 05 இற்குரிய 03 வாகனங்கள், நீர் மோடார் உள்ளிட்ட 47 பல இயந்திர உபகரணங்கள் 05 ஆண்டுகள் அளவு காலமாக பயன்படுத்தப்படாது நிலவின. | மாவட்ட செயலாளரின் ஆலோசனைப்படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்கள் பயன்படுத்தாது வைத்திருக்கக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிரதேச செயலக பிரிவுகள் 10 இலான 79 அரச கட்டிடங்கள் பயன்படுத்தப்படாது நிலவின. | பழுதடைதல், மண்சரிவு எச்சரிக்கை போன்றவை இதற்கு காரணமாக இருந்தன. | சொத்துக்கள் பயன்படுத்தாது வைத்திருக்கக் கூடாது. |

## 3.4 நட்டம் மற்றும் இழப்பு

| | கணக்காய்வு அவதானங்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------- | ------------------------------ | -------------- |
| (அ) | மாவட்ட செயலகத்திற்கு கிடைக்காத மறைக் காணி (CCTV Cemera) 04 இற்காக ரூபா 209,383 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அக் கெமராக்களை பொருத்துமாறு ஒப்பந்ததாரர் அறிவூட்டப்பட்டுள்ளதாக. | வேலைகள் உறுதி செய்யப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்ய வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்தில் பொறுத்தியுள்ள மின் தூக்கியின் உள்ளக அகலம் குறைவு காரணமாக செய்யப்படாத பணிக்காக ரூபா 212,273 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரரிடமிருந்து ரூபா 26,786 தொகை குறைத்துக் கொள்வதாக. | ரூபா 212,273 தொகை அறவிடப்பட வேண்டும். |
| (இ) | மொத்த தேவைப்பாடு தொடர்பாக கவனத்துடன் தேவையான பண்டங்களை ஒரே தடவையில் கொள்வனவு செய்வதாயின், ஒரே தடவையில் கூடுதலான அளவை கொள்வனவு செய்யும் போது விலையில் ஏற்படும் நன்மையை பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்த போதிலும், அவ்வப்போது 32 கணனிகளை கொள்வனவு செய்ததால் ரூபா 1,475,600 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | தொற்று நிலைமை, இறக்குமதி கட்டுப்பாடு, சந்தையில் இருப்பு பற்றாக்குறை போன்றவை காரணமாக கொள்வனவு செய்ய முடியாதிருந்தது. | திட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மாவட்ட செயலகத்தில் மற்றும் 02 பிரதேச செயலகங்களில் 07 கைத்தொழில்களுக்காக ரூபா 590,886 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | மிகைக் கொடுப்பனவை நிறுத்தலிலிருந்து குறைத்தல் மற்றும் இவ்வாறானவை இடம்பெறாமல் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. ஒரு கைத்தொழிலிற்காக ரூபா 119,906 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருக்கவில்லை. | மிகைக் கொடுப்பனவை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மாவட்ட செயலகத்தில் மின் சுற்றுத் தொகுதி பலகை தீபற்றியதால் ரூபா 4,143,204 ஆன இழப்பு ஏற்பட்டு 2023 மார்ச் மாதமளவில் 14 மாதங்கள் கடந்திருந்த போதும், நிதிப்பிரமாணம் 104 பிரகாரம் பொறுப்பை உறுதி செய்து இழப்பை மீள்நிரப்பிக் கொள்ளவுள்ள இயலுமையை கண்டறிந்திருக்கவில்லை. | இது தொடர்பில் முன்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானங்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிரிஎல்ல ஹொலீபிடிய புராண கற்குகை கோவிலில் கட்டிடமொன்றை நிர்மாணிக்க 12 கொங்கிரீட் தூண்களை இட்டு நிர்மாணத்தை கைவிட்டிருந்த காரணத்தால் அதற்காக செலுத்திய ரூபா 346,318 தொகை சிக்கனமற்ற செலவொன்றாக இருந்தது. | பொருளாதார நெருக்கடி காரணமாக முக்கியமற்ற கருத்திட்டங்களை கைவிட நிதி அமைச்சின் ஆலோசனை கிடைத்தமை | அரைவாசி நிர்மாணித்த கருத்திட்டங்களை பூர்த்தி செய்ய வேண்டும். |
| (ஆ) | குருவிட்ட, காஹேன்கமயில் அமைந்துள்ள சேவைகள் இல்லம் கட்டிடத்திற்கு நீர் மற்றும் மின்சாரம் இல்லாததால் ஓராண்டிற்கு அதிக காலமாக பயன்படாது காணப்பட்டதால் அதற்காக செலவிட்ட ரூபா 1,165,048 தொகை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாக இருந்தது. | எதிர்காலத்தில் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதாக. | அபிவிருத்தி கருத்திட்ட நடவடிக்கைகளை வினைதிறனாக மற்றும் பயனுறுதிமிக்கதாக மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | இரத்தினபுரி, படுகெதர, ஹல்கஸ்யாயவில் 20 ஏக்கர் தரிசு வயல்களை பயிர்ச் செய்ய ரூபா 1,164,000 செலவிட்டு 2022 ஜூன் மாதத்தில் அவ்வயல் வெளிக்கு நீர் வழங்கும் அணைக்கரை புனர்நிர்மாணம் செய்யப்பட்டு இருந்தது. எனினும், 2022 செப்டம்பர் அளவில் இரண்டு விவசாயிகள் மாத்திரம் $1^{1}/_{4}$ ஏக்கர் அளவான காடுகளை துப்பரவு செய்திருந்ததை தவிர வேறு முன்னேற்றம் இருக்கவில்லை. | இது தொடர்பாக கமநல சேவைகள் அலுவலகம் மற்றும் நீர்பாசன பொறியியலாளர் அலுவலகத்தை அறிவூட்டியதாக. | அபிவிருத்தி கருத்திட்ட நடவடிக்கைகளை வினைதிறனாக மற்றும் பயனுறுதிமிக்கதாக மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | இரத்தினபுரி பிரதேசத்தில் செயற்படுத்திய இயற்கை பசளை ஏலம் பயிரிடும் கருத்திட்டத்தின் கீழ் 2021 ஆண்டில் நிர்மாணித்த ரூபா 1,891,548 தொகையான உளர்த்தும் மத்திய நிலையமும், ரூபா 400,000 ஆன | எதிர்காலத்தில் இக் கருத்திட்டத்தை வெற்றிபெறச் செய்து கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | செலவிட்ட பணத்திற்கு போதிய நலனை பெற்றுக் கொள்ள வேண்டும. |

உளர்த்தும் இயந்திரமும் அத்திகதி முதல் பயன்படுத்தாது நிலவின. இக் கருத்திட்டத்திற்காக சாத்தியப்பாட்டு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு இருக்காததுடன் முன்னேற்றம் தொடர்பாக எவ்வித பின்னூட்டலும் மேற்கொண்டிருக்கவில்லை.
கருத்திட்டத்தை செயற்படுத்திய பிரதேசத்தின் வீட்டுத் தோட்டங்களில் தனிப்பட்ட பாவனைக்காக 02 அல்லது 03 ஏலக் கன்றுகள் மாத்திரம் பயிரிட்டுள்ள 20 குடும்பங்கள் அளவில் இருப்பதாக பௌதீக பரிசோதனையின் போது உறுதியானது.

**3.6 பயனற்ற செலவுகள்**

| | கணக்காய்வு அவதானங்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கஹவத்த பிரதேச செயலகத்தால் 785 கோழிக் குஞ்சிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு இருந்தன. அவற்றில் 589 குஞ்சிகள் அதாவது, 75 சதவீதத்திலும் அதிகமானவை நோய்வாய்ப்படல் போன்ற காரணத்தால் ஆரம்ப காலத்திலேயே இறந்திருந்தன. அதனால் அக்குஞ்சிகளை கொள்வனவு செய்ய செலவிட்ட ரூபா 270,940 தொகை விளைவற்ற செலவொன்றாக இருந்தது. அவ்வாறே, சாதாரணமாக கோழிகளுக்கு சேவல்களின் விகிதம் 9:1 ஆக வேண்டிய போதும், அது 3:2 ஆன சாத்தியமற்ற பெறுமானத்தை கொண்டிருந்தது. கால்நடைவளம் தொடர்பாக நிபுணத்துவமுடைய உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வை இக் கருத்திட்டத்தின் ஆரம்பம் முதல் இல்லாதிருந்தமை இதற்கு காரணமாக இருந்தது. | நலன்பெறுனர்களால் கட்டுப்படுத்த முடியாத காரணங்கள் மற்றும் நலன்பெறுனர்களுக்கு எந்த நேரமும் மிருக வைத்திய அலுவலகத்திற்கு வருவதன் கடினத்தின் மீது எதிர்பார்த்த நோக்கம் அடையப்பெறவில்லை. | அபிவிருத்தி கருத்திட்ட நடவடிக்கைகளை வினைதிறனாக மற்றும் பயனுறுதிமிக்கதாக மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | குருவிட்ட, கந்தன்கொட பிரதேசத்தில் கால்வாயை வெட்டி இரு பக்கத்தையும் அமைத்து ஓராண்டு முடிய முன்னர் அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என கண்டுகொள்ள முடியாத அளவு இருபக்க வரம்புகள் உடைந்து புல் முழைத்து காணப்பட்டது. இதனால் அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,892,459 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது. | கால்வாயை பராமரித்து பேணிச் செல்ல தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவூட்டப்பட்டுள்ளார். | அபிவிருத்தி கருத்திட்ட நடவடிக்கைகளை வினைதிறனாக மற்றும் பயனுறுதிமிக்கதாக மேற்கொள்ள வேண்டும். |

**3.7 முகாமைத்துவ பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானங்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிரிஎல்ல புதிய பிரதேச செயலகம் மற்றும் உத்தியோகபூர்வ இல்ல நிர்மாணத்திற்காக உத்தேச காணி 45 சதவீத மண்சரிவு ஆபத்து நிலவுவதாக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பினால் அறிக்கையிடப்பட்டிருந்த போதும், அக் காணியை சுவீகரிக்கும் நடடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றது. | இக் காணியை மீணடும் அவ் அமைப்பிற்கு பரிசோதனைக்காக அனுப்புவதாக. | மண்சரிவு ஆபத்து தொடர்பாக கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | இபுல்பே பிரதேச செயலகப் பிரிவில் 02 விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்ய உள்ளூராட்சி நிறுவனங்களின் இயந்திர உபகரணங்கள் மற்றும ஊழிய பங்களிப்பை பெற்றுக் கொள்ள வேண்டுமென ஏற்பாடு வழங்கிள அமைச்சினால் ஆலோசனை வழங்கியுள்ள போதும், ரூபா 823,902 தொகை செலுத்தி ஒப்பந்ததார் மூலம் அந் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. | இது தொடர்பாக பிரதேச சபையிடம் விசாரித்துள்ளதுடன், பதில் கிடைத்தவுடன் சமர்பிப்பதாக. | உரிய ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.8 செயற்பாட்டு பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானங்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகம் மற்றும் 07 பிரதேச செயலகங்களில் 02 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா 54,398,346 பெறுமதியான 627 வைப்புக்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுநிதி கிடைக்காமை இதற்கு காரணமாக இருந்தது. | நிதிப் பிரமானம் 571 இனை பின்பற்ற வேண்டும். |
| (ஆ) | பிரதேச செயலகத்தினால் 2022 ஆண்டினுள் அரசாங்க காணிகளுக்கு அனுமதிப் பத்திரம் மற்றும் ஒப்படைப் பத்திரம் விநியோகிக்கும் போது, 02 அலுவலங்களில் காணிக் கச்சேரி நடாத்தாமையும், 06 அலுவலகங்களில் நடாத்திய காணிக் கச்சேரி எண்ணிக்கை 04 முதல் 06 | காணி ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாக மேற்கொள்வதாக. | காணி ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவு குறைந்த வீச்சளவை கொண்டிருந்தமையும், 02 அலுவலகங்களினால் அனுமதியற்ற காணிகளில் ஒழுங்கமைக்க இருந்த காணி அளவை இனங்காணாமையும், காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தினுள் அனுமதியற்ற காணிகளை ஒழுங்கமைக்கும் செயற்பாடு மெதுவான போக்கை கொண்டிருந்தது. | | |
| (இ) | 04 பிரதேச செயலக அதிகார பிரதேசங்களிலுள்ள 13 சமுர்தி வங்கிகளினால் வழங்கிய மொத்த கடனில் 2022 நவம்பர் 30 திகதியன்று ரூபா 162,205,520 காலம் கடந்த கடன் மற்றும் ரூபா 45,244,077 ஐயக் கடன் காணப்பட்ட போதும் அவற்றை அறவிட தெளிவான வேலைத் திட்டமொன்று இருக்கவில்லை. | கடன் அறவிடவும் ஒழுக்காற்று பரிசோதனை நடாத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிலுவை கடனை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | எலபான மற்றும் கிரஎல்ல பிரதேச செயலக பிரிவுகளிற்கு உட்பட்ட பலாவெல – திமியாய பாதையை மற்றும் மில்லகடுே பன்சல் பாதையையின் திருத்தங்கள் 2019 பூர்த்தி செய்திருந்த போதும், அப்பாதைகள் வெடிப்பு மற்றும் பழுதடைந்து காணப்பட்டன. அவற்றை மீண்டும் திருத்த ரூபா 919,499 தொகை நிறுத்தி வைக்கப்பட போதும், 2019 முதல் இதுவரை 04 ஆண்டுகள் கடந்தும் நிறுத்தி வைத்த அத்தொகையால் தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கவில்லை. | வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் இது தொடர்பாக விசாரிக்கப்பட்டுள்ளது | - கருத்திட்டத்தை உரிய தரத்தில் மேற்கொள்ளாத ஒப்பந்ததாரர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>- பாதயை துரிதமாக திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 09 பிரதேச செயலகங்களினால் 2022 திசெம்பர் 15 திகதி ஓய்வூதிய சம்பளம் ரூபா 10,180,455 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது அறவிடப்படுகின்றது. | மிகை கொடுப்பனவை விரையில் அறவிட வேண்டும். |
| (ஊ) | 09 பிரதேச செயலகங்களில் பிணை வைக்க வேண்டிய 33 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை. | பிணைப் பணம் அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | நிதிப் பிரமாணம் 880 பிரகாரம் பிணை பெற்றுக் கொள்ள வேண்டும். |

**3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானங்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எஹலியகொட பிரதேச செயலக பிரிவில் ஒரு வாகனத்திற்கு ஏற்பட்ட ரூபா 292,897 ஆன இழப்பை பதிவழிக்க தீர்மானித்தது தவறானது என ஒமபுட்ஸ்மன் அவர்களினால் குறிப்பிட்டிருந்த போதும், அம் மீதிகள் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக மீள் பரிசோதனை மேற்கொள்ள சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நேர்முகப் பரீட்சை சபை தமது பொறுப்பை உரியவாறு மேற்கொள்ளாததல் இபுல்பே பிரதேச செயலக பிரிவில் பிறப்பு, திருமணம் மற்றும் மரண பதிவாளர் பதவிக்காக மேற்கொண்ட நியமனம் சர்ச்சைக்குரியதாக இருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நேர்முகப் பரிசோதனை மிகச் சரியாக மற்றும் பக்கச்சார்பின்றி மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | மாவட்ட செயலக கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்படும் சிற்றுண்டிச் சாலையிலிருந்து மற்றும் நலன்புரி வியாபார நிலையித்திலிருந்து 2013 – 2022 ஆண்களிற்கு இடையிலான காலத்தில் கிடைத்த கட்டிட வாடகை ரூபா 2,671,760 தொகை நலன்புரி சங்கமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த வாடகை கட்டணத்தை அரசாங்க வருமானமொன்றாக இனங்கண்டிருக்காததுடன் அரச கட்டிடமொன்றிலிருந்து ஈட்டும் வாடகை வருமானத்தை நலன்புரி சங்கமொன்றிற்கு வழங்க காணப்படும் சட்ட இயலுமையை உறுதி செய்து கொள்ள முடியவில்லை. அவ்வாறே, எவ்வித டென்டர் விண்ணபமும் இன்றி 2020 ஆண்டு முதல் இது வரை அவ் ஒப்பந்ததாரரினால் சிற்றுண்டிச் சாலையை நடாத்திச் செல்வதுடன், அவரினால் 2022 மற்றும் 2023 ஆண்டிற்காக ரூபா 60,533 ஆன நீர் பட்டியலும், நலன்புரி வியாபார நிலையத்தால் ரூபா 35,459 ஆன மின்சார பட்டியலும் தீர்த்திருக்கவில்லை. | எதிர்வரும் வாடகை வருமானத்தை அரச வருமானத்திற்கு செலவு வைக்கவும், நீர் மற்றும் மின்சார பட்டியலை அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்படும். | அரச வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |

4. **மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானங்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மேலதிக 197 ஊழியர்களின் கடமை தேவைப்பாட்டை இனங்கண்டு தேவையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள அல்லது பயனுறுதிமிக்கதாக ஏனைய நிறுவனங்களிற்கு இணைக்க ஏனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலவுகின்ற வெற்றிடங்களை கவனத்திற் கொள்ளாது வரிசை அமைச்சினால் இந்த இணைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 71 பிரகாரம் பதவிகளை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். |